செ.வெ.எண்: 398 நாள்: 28.06.2019

**மழைநீரை சேமிக்கும் வகையில் ஊரணிகளை தூர்வார கிராமசபைக் கூட்டத்தில் நடவடிக்கை.**

**நீர்மேலாண்மை மற்றும் நீரினை சிக்கனமாக பயன்படுத்த பொது மக்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்த நடவடிக்கை.**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொணடார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், லெம்பலக்குடி ஊராட்சியில் இன்று (28.06.2019) நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு பேசியதாவது.

அரசின் செயல்பாடுகள் வெளிப்படை தன்மையுடன் நடைபெறுவதை உறுதிசெய்யும் வகையில் ஜனவரி -26 குடியரசு தினம், மே-1 உழைப்பாளர் தினம், ஆகஸ்ட் -15 சுதந்திர தினம், அக்டோபர் -2 காந்தி ஜெயந்தி என ஆண்டுக்கு 4 முறை கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் தொழிலாளர் தினமான 01.05.2019-ஆம் தேதியன்று நடைபெற வேண்டிய கிராமசபைக் கூட்டம் பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 497 கிராம ஊராட்சிகளிலும் கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது.

இக்கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம், திட்ட அறிக்கை, குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல், மழை நீரை சேமிக்கும் பொருட்டு சிறிய ஊரணிகளை தூர்வாருதல் மற்றும் புதிய ஊரணிகளை ஏற்படுத்துதல், அதிக அளவில் மரங்களை நடுதல், கிராம அளவில் தனி நபர் வீடுகளில் மழை நீரை சேமிக்கும் பொருட்டு மழை நீர் சேமிப்பு தொட்டிகளை கட்டுதல், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்தும் பொருட்டு தனி நபர்

இல்லங்களில் புதிய உறிஞ்சுக்குழிகள் அமைத்து வீடு மற்றும் விவசாய நோக்கங்களுக்காக உபயோகப்படுத்துதல் உள்ளிட்டவைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் மழை நீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு குறித்த அவசியத்தினை உணர்த்திடும் வகையில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் பேரணிகள் மூலம், கிராமப்புற பள்ளிகளில் நாடகங்கள், நடன நிகழ்ச்சிகள், கிராமிய பாடல்கள் மற்றும் விளையாட்டுகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பொது இடங்களில் நீர் மேலாண்மை குறித்த சுவர் ஓவியங்கள் தீட்டுதல் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

குழந்தை திருமணம், பாலியல் வன்கொடுமைகள் நிகழாததை உறுதிப்படுத்துதல், மேலும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் பற்றிய தகவலினை 1098 மற்றும் 04322-221266 ஆகிய எண்களுக்கு தகவல் தெரிவித்திட போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் (VPDP), பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி தடைசெய்தல், பிரதமமந்திரி குடியிருப்பு திட்டம்(ஊரகம்), முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் 2019-2020, முழுசுகாதார தமிழகம்-முன்னோடி தமிழகம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், மகளிர் திட்டம் விவரம் உள்ளிட்ட பொருட்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் பொதுமக்கள் பேருந்து வசதி, புதிய மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, தொழில் தொடங்க வங்கிகடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மனு அளித்தனர். இந்த மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

குறிப்பாக குடிநீர் தேவைக்கு முன்னுரிமை அளித்து பணியாற்ற அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) எஸ்.பாலமுரளி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீஜெயந்திதேவி, செல்வராஜ் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

-----------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**